Central Grants

* 211 *Q*.—SRI S. B. ADITYAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the amount received by the Government from the Centre by way of subsidies during 1956–57; and

(*b*) the purpose for which they were received?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The answer[a] is placed on the table of the House.

SRI S. LAZAR : ஸார், இந்த ரஸ்தா சம்பந்தமாக முதலாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்படாத திட்டங்களை இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்து எடுத்துக் கொள்ளாததற்கு என்ன காரணம் ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இதற்கென்று 2·2 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ரஸ்தா சம்பந்தமான திட்டங்கள் எல்லாம் கவனிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எதெது முதலாவது அவசியமாயிருக்கிறதோ அவைகள் எல்லாம் ஆலோசனை செய்யப்பட்டு வருகின்றன.

SRI S. B. ADITYAN : ஸார், தமிழ்நாட்டிலிருந்து டில்லி சர்க்காருக்கு வருடம் 60 கோடி ரூபாய் மத்திய வரி என்ற பெயரால் வசூல் செய்யப்படுகிறது. இதைக் கவனிக்கும்பொழுது நமக்கு மத்திய சர்க்காரிலிருந்து உதவித்தொகை என்ற உருவத்தில் 6 கோடி ரூபாய் தான் வருகிறது. இது மிகவும் குறைவாகத் தோன்றுகிறது. ஆகவே டெல்லியில் நமது நிதி மந்திரி அவர்களுக்கிருக்கின்ற செல்வாக்கை பயன்படுத்தி 6 கோடி என்றிருப்பதை 10 கோடியாக பெறுவதற்கு ஏதாவது முயற்சி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : 60 கோடி ரூபாய் வசூல் செய்யப்படுகிறது என்ற கணக்கு "நாம் தமிழர்" கட்சியின் கணக்கா அல்லது "திராவிட முன்னேற்ற கழகத்தின்" கணக்கா என்று தெரியவில்லை. இந்த கணக்கு சரியல்ல என்பதை சொல்லிக் கொள்கிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR : அப்படி 60 கோடி ரூபாய் மத்திய அரசாங்கத்திற்குப் போகிறது, ஆனால் நமக்கு 6 கோடி ரூபாய் தான் கிராண்டாக வருகிறது என்றால் மற்றும் பல ஏற்பாடுகளில் மத்திய சர்க்காரால் செலவு செய்யப்படுவதை எதில் கணக்கிடுவது என்று கேட்கிறேன்.

MR. SPEAKER : இது சம்பந்தமில்லாத கேள்வி என்று நினைக்கிறேன்.

SRI A. V. P. ASAITHAMBI : ஸார், இங்கே இருந்து வடக்கே போகிற ரூபாயின் கணக்கு "நாம் தமிழர்" கட்சியின் கணக்கா அல்லது தி.மு.க.வின் கணக்கா என்று கேட்டார்கள். இந்த கணக்கு சரியில்லை என்றால் இந்த அரசாங்க கட்சிதான் சரியான புள்ளி விவரங்களை சொல்லட்டுமே.

THE HON. SRI C. SUBRAMANIAM : அவ்விதம் கேட்பதாயிருந்தால் கொடுப்பதற்கு முயற்சி செய்யப்படும்.

SRI S. B. ADITYAN : ஸார், பாயின்ட் ஆப் ஆர்டர், மந்திரி அவர்கள் சொன்னார்கள், கேட்டால் பதில் கொடுப்பதற்கு முயற்சி செய்யப்படும் என்று. ஆனால் கேள்வி அனுப்பப்பட்டது, அதை அனுமதிக்கவும் இல்லை, அப்படியென்றால் எந்த விதத்தில் அவர்கள் பதில் அளிக்கப்போகிறார்கள் ?

MR. SPEAKER : கேள்வியை அனுமதிக்க வேண்டிய பொறுப்பு என்னைச்சார்ந்தது. அதை அனுமதிக்கவில்லை என்றால் ஏன் அனுமதிக்கப்படவில்லை என்ற காரணத்தையும் சொல்லப்பட்டிருக்கும்.

---

[a] Printed as Appendix II on pages 303–310 infra.

TRUTH ALONE TRIUMPHS

5th March 1958]

SRI S. B. ADITYAN : பதில் வந்தது. இது மத்திய சர்க்காரில் கேட்கவேண்டுமே ஒழிய நமது நிதி அமைச்சர் அவர்களிடத்தில் எப்படி கேட்பது என்று கேட்டிருந்தது.

MR. SPEAKER : அதில் தவறு ஒன்றுமில்லேயே.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி கேட்கவேண்டிய இடத்தில் கேட்டால் பதில் கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Repairs to tanks

* 212 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the amount spent to repair the tanks damaged by the overflow of water in 1956–57 in the Bhavani taluk, Coimbatore district; and

(*b*) the amount spent to repair the channel connecting them?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The exact amount spent in carrying out repairs to the tanks damaged by the overflow of water in 1956–57 in Bhavani taluk is Rs. 15,588.

(*b*) The amount spent on repairing the channels connecting them is Rs. 1,314.

SRI P. G. MANICKAM : ஸார், இதில் குறிக்கப்பட்டிருக்கும் வாய்க்கால் மூலம் மழை பெய்யும் காலங்களில் தண்ணீர் கிடைக்கிறது. மேலும் அங்கிருக்கின்ற ஏழு குளங்களுக்கு மேட்டூர் அணைக்கட்டிலிருந்தும் லோயர் பவானி அணைக்கட்டிலிருந்தும் தண்ணீர் விட முடியும். ஆகவே இதற்கு ஒரு திட்டத்தை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருவார்களா என்று கேட்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அந்த ஏழு குளங்கள் எதெல்லாம் என்று தெரியவில்லே. ஆகவே இதற்கு தனிக்கேள்வி போடும்படி கேட்கிறேன்.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1958–59—*cont.*

MR. SPEAKER : இன்றைய தினமும் பட்ஜெட்டின்மீது பொது விவாதம் நடைபெறும். இன்றைக்கு பேசுவதற்கு 35 அங்கத்தினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு அங்கத்தினரும் 10 நிமிஷங்கள் தான் பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் 8-வது நிமிஷத்தில் மணியடிக்கிறேன். அதன் பின் இரண்டு நிமிஷங்கள் கழித்து 10-வது நிமிஷத்தில் முடித்துக்கொள்ளவேண்டும் என்று எல்லா அங்கத்தினர் களேயும் கேட்டுக்கொள்கிறேன்.

*SRI P. P. M. T. PONNUSWAMY : மதிப்பிற்குறிய சபாநாயகர் அவர்களே உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனே செய்வோம் என்ற பாரதியாரின் வாக்குப்படி கனம் நிதி மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த வரவு செலவுத் திட்டத்தை நன்றியுடன் ஒப்புக் கொள்கின்ற நேரத்தில், சென்ற ஒரு வருஷத்திய அனுபவத்தைக் கொண்டு சில யோசனைகளை சமர்ப்பிக்க விரும்புகிறேன். இங்கு பல நண்பர்கள் பல விஷயங்களைப்பற்றி பேசினார்கள். நான் சுருக்கமாக சில விஷயங்களை மட்டும் சொல்லுகிறேன். மின்சாரம் சம்பந்தமாக, கிராம மக்களுக்கு மின்சார பம்பு செட்டுகள் வைக்கவேண்டும் என்று நாம் பிரசாரம் செய்தோம். அதை அவர்கள் ஏற்படுத்தும்பொழுது அவர்களுக்கு இதில்